கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.152/2012

வா.சா.1 - மகாலிங்கம்

நாள். 16.12.2025 த/பெ - தர்மர் நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் இவ்வழக்கில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முதல் விசாரணை வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயாரித்தார் என்றால் சரிதான். மேற்படி முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது என்றால் சரிதான்.

2) இவ்வழக்கின் 1ம் தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் சரியாக ஞாபகம் இல்லை. நான் இவ்வழக்கை தாக்கல் செய்யும் சமயம் அரசாங்கத்தை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2023 ம் வருடம் தான் அரசாங்கத்தை கட்சி சேர்த்தேன் என்றால் சரிதான். அரசாங்க அதிகாரிகள் யாரும் 1ம் தபசில் சொத்தில் என்னுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) இவ்வழக்கின் 2ம் தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.52/97 ஆகும். நான் கூறும் சர்வே எண் தவறு என்றாலும், சரியான சர்வே எண்.2336/23 என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 2 ம் தபசில் சொத்தானது வருவாய் துறை ஆவணங்களில் அரசு புறம்போக்கு ரோடு என உள்ளது என்றால் சரிதான். அரசு புறம்போக்கு ரோடு என்பது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான்.

4) 2ம் தபசில் சொத்து பொறுத்தும் நான் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் சரிதான். நான் எதற்காக அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட 2ம் தபசில் சொத்து சம்மந்தமாக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உள்ளேள் என்றால் 1ம் பிரதிவாதி ரோட்டில்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.12.16 15:25:54 +0530

இருந்து எனது 1ம் தபசில் சொத்திற்கு வரும் பாதையை அடைத்து எனது வசதி உரிமையை இடைஞ்சல் செய்கிறார். 1ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்வது சம்மந்தமாக 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நான் புகார் மனு ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் புகார் மனு கொடுத்துள்ளேன். மேற்படி புகார் மனு நகல்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் புகார் கொடுத்து இருந்தால் அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இருப்பார்கள் என்றாலும், புகார் கொடுக்காததால் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர இயலாது என்றால் சரியல்ல, நான் புகார் கொடுத்துள்ளேன்.

5) நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை பத்தி 7 ல் பணகுடி காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக கூறி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பணகுடி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், அதனால் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றாலும், இவ்வழக்கு வெற்று வழக்கு என கருதி தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

6) அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் உரிமையியல் நடைமுறை சட்டத்தின்படி அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் என்பது நியதி, அதை நான் கடைப்பிடிக்கவில்லை என்றாலும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் ஏதும் வழக்குரையில் கூறப்படவில்லை என்றாலும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் ஏதும் கோரப்படவில்லை என்றாலும், அதனால் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

வா.சா.1 குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

(1ம் பிரவாதி குறுக்குவிசாரணைக்காக மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.12.16 15:26:00 +0530